[பேரவைத் தலைவர்] [2005 பிப்ரவரி 1

அவரது மறைவால் துயருற்று வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கும் அவர் சார்ந்திருந்த இயக்கத்திற்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தினையும் தெரிவித்துக் கொள்கிறது."

முற்பகல் 10–05

(ஆ) பாரத ரத்னா திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமி, வாய்ப் பாட்டு இசைக் கலைஞர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: "கோடிக்கணக்கான மக்களின் இதயங்களைத் தனது கர்நாடக இசையின் மூலம் சொந்தமாக்கிக் கொண்டவரும், இந்தியாவின் உயரிய விருதான பாரத ரத்னா விருது பெற்றவருமான, கர்நாடக இசை அரசி, திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்கள் 11–12–2004 அன்று மறைவுற்றது குறித்து இப்பேரவை தாங்கொணாத் துயரம் அடைகிறது.

மறைந்த திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்கள் கர்நாடக இசையை உலகம் முழுவதும் பரப்பிய இசைக் குயில் ஆவார். இனிய குரல் வளமும், தெளிவான உச்சரிப்புத் திறனும் கொண்டவர். தான் பாடும் பாடல்களில் அவற்றைத் திருத்தமாக வெளிப்படுத்துகின்ற ஆற்றல் படைத்தவர். கருணை உள்ளம், அடக்கம், இனிமை இவை அனைத்திற்கும் உறைவிடமாகத் திகழ்ந்தவர். இசையையே தனது வாழ்க்கையாகக் கொண்டவர். அவரது குரல், அழகும், ஆன்மீகமும் ஒருங்கே இணைந்த குரல். கர்நாடக இசைபற்றி அறியாதவர்களைக்கூட தனது இனிய குரலால் மயங்க வைத்தவர். மதுரையில் பிறந்து தெய்வீக இசையின் உலகார்ந்த தன்மையால் புவி முழுமையும் தனது சொந்தமாக்கிக் கொண்டவர். தன்னுடைய இனிய கீதங்களினால் மகிழ்ச்சி, இறை பக்தி, தேசப்பற்று ஆகிய உணர்வுகளை உருவாக்கும் ஆற்றல் பெற்றவர். இந்தியாவின் உயரிய விருதான பாரத ரத்னா விருது மற்றும் மக்சாசே போன்ற பல்வேறு பெருமைக்குரிய விருதுகளைப் பெற்றவர். தனது வாழ்நாள் முழுவதும் இசைச் செல்வத்தை மட்டுமின்றி, தான் ஈட்டிய பொருட்செல்வத்தையும் வாரி வழங்கியவர். கர்நாடக இசையின் மதிப்பிட முடியாத மாணிக்கக் கல்லான திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்களின் இழப்பு, ஈடு செய்ய முடியாதது. அவரது இடம் இன்னொருவரால் நிரப்ப இயலாதது. அவர் நம்மை விட்டு மறைந்தாலும், அவரது தெய்வீகக் குரல் நம்மை விட்டு மறையாது.

2005 பிப்ரவரி 1] [பேரவைத் தலைவர்]

கர்நாடக இசைக் குயில் திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்களது மறைவால் துயருற்று வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் தெரிவித்துக்கொள்கிறது."

(இ) சுனாமி பேரலையின் தாக்குதலால் 26-12-2004 அன்று ஏற்பட்ட மனித உயிரிழப்புகள் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *"26-12-2004 அன்று தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களை சற்றும் எதிர்பாராத வகையில், சுனாமிப் பேரலைகள் திடீரென கடும் சீற்றத்துடன் தாக்கியதில் கடலோர கிராமங்களைச் சேர்ந்த இலட்சக்கணக்கான மக்கள் தங்களது வீடுகளையும், உடைமைகளையும் இழந்ததுடன், இப்பேரலைகளின் தாக்குதலால் ஏறத்தாழ 8 ஆயிரம் பேர் விலை மதிப்பற்ற தங்களது இன்னுயிரை இழந்தது குறித்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.*

இயற்கையின் சீற்றத்தால் முன் எப்போதும் இல்லாத வகையில் தமிழகத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களின் தலைமையிலான அரசு திறமையாகச் சமாளித்து வருவதுடன், பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் ஒளி மிகுந்த ஒரு புதிய வாழ்க்கையை நிர்மாணித்திட அனைத்துத் தரப்பினருடைய ஒத்துழைப்புடன் சீரிய முறையில் முயன்று வருகிறது. இந்த நெஞ்சை உருக்கும் சம்பவத்தின் காரணமாக உயிரிழந்தவர்களுக்கும், அவர்களை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும், உறவினருக்கும் இப்பேரவை ஆழ்ந்த இரங்கலையும், அஞ்சலியையும் தெரிவித்துக்கொள்கிறது."

(ஈ) திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு, உறுப்பினர் மற்றும் முன்னாள் அமைச்சர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *"காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு தற்போதைய சட்டமன்றத்தில் உறுப்பினராகவும், அமைச்சராகவும் பணியாற்றிய திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு அவர்கள் 22-11-2004 அன்று மறைவுற்றது குறித்து இந்தப் பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.*